பட்டுச் சாறிகள்
பட்டுவேட்டிகள் மற்றும்
சிறுவர்களுக்கும்
பெரியவர்களுக்கும் புதிய
டிசைன் புடைவைகளை
தெரிவுசெய்ய
★ இன்றே நாடுங்கள் ★
மதுரா
பட்டு மகால்
75, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் ஒளி நூலகம்.

பக்கங்கள்! நான்கு
Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 09 வியாழக்கிழமை (25 - 08 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 271

மனமிசைந்து ஏவி
மங்கையர் நாடும் ஒரே
★ புடைவை ஸ்தாபனம் ★
மதுரா
பட்டு மகால்
75, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பொருளாதார தடையை நீக்க புதிய அரசு முயற்சி

யுத்த நிறுத்தம் கொண்டு வருவதற்கும் விருப்பம்!

ஜனாதிபதித் தேர்தலிலும் காமினியே வேட்பாளர்?

கொழும்பு, ஓக. 25

ஐ.தே.க நாடாளுமன்றக் குழுத் தலைவராகத் தெரிவாகியதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவராகியுள்ள காமினி திஸநாயக்கா, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு தமக்கே கிடைக்கும் என்று கருதுவதாக, கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் ஐ.தே.கவின் வருடாந்த மாநாடு கடந்த டிசம்பரில் நடைபெற்ற போது —

ஜனாதிபதித் தேர்தலில் கட்சி வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவையே நிறுத்துவது என்று முடிவு செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே. (உ-எ-6)

இரகசிய வாக்கெடுப்பில்

இ.தொ.கா. 7 எம்.பிக்களும் கலந்து கொள்ளவில்லை!

கொழும்பு, ஓக. 25

ஐக்கியதேசியக்கட்சி நாடாளுமன்றக் குழுவின் தலைவரைத் தெரிவுசெய்ய நடத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பில் இ.தொ.காவின் ஏழு எம்.பிக்கள் கலந்துகொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் 94 பேரில் 87 எம்.பிக்கள் மட்டுமே நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஐக்கியதேசியக் கட்சியின் தேசியப் பட்டியலை இறுதி நேரத்தில் கட்சித் தலைமைப்பீடம் மாற்றி அமைத்தபோது இ.தொ.காவைச் சேர்ந்த ஏ.எம்.டி. ராஜன் எம்.பியாக நியமிக்கப்பட்டார்.

இவரையும் சேர்த்து நாடாளுமன்றத்தில் உள்ள இ.தொ.காவின் எம்.பிக்களின் எண்ணிக்கை ஏழாக அதிகரித்துள்ளது. (ஓ-6)

ஜே. ஆரும் பங்குபற்றினார்

கொழும்பு, ஓக. 25

ஐ.தே.க. நாடாளுமன்றக் குழுவின் தலைவர் தெரிவு நடந்த கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் கலந்து கொண்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இவரின் ஆதரவு யாருக்கு இருந்தது என்பது பற்றிய விபரம் வெளியாகவில்லை. (ஓ-எ-6)

விடுதலைப் புலிகளின் பதிலை எதிர்பார்ப்பதாகத் தகவல்

கொழும்பு, ஓகஸ்ட் 25

வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை நீக்க பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் புதிய அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

யுத்த நிறுத்தத்தைக் கொண்டுவரவும் புதிய அரசு விரும்புவதாகவும் —

இவை தொடர்பாக விடுதலைப்புலிகளின் ஆக்கபூர்வமான பதிலை புதிய அரசு எதிர்பார்த்திருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

நீர்ப்பாசன, எரிபொருள், மின்சக்தி அமைச்சரும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான கேணல் அனுருத்த ரத்வத்தையை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்ஸிகள் இத்தகவல்களை அறிவித்தன.

பாதுகாப்பு அமைச்சில் நேற்றுத் தமது கடமைகளை ஏற்றுக் கொண்ட அமைச்சர் கேணல் ரத்வத்தை அங்கு கூறியதாவது:-

நாட்டை எதிர்நோக்கியுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கத்துடன் புதிய பிரதமமந்திரி சந்திரிகா குமாரணதுங்க ஏற்கனவே நேசக்கரம் நீட்டியுள்ளார்;

(4ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி

தர்மிஷ்டருக்கு அரசியலை விட்டு ஒதுங்க மனம் இல்லை பாருங்கோ...!

தடையை நீக்கும் அதிகாரம் அரசாங்கத்திடம் இல்லை

ஜனாதிபதியே அதற்குப் பொறுப்பு

கொழும்பு, ஓக. 25

பொருளாதாரத் தடையை நீக்கப் புதிய அரசாங்கம் விரும்பினாலும் அதற்கான அதிகாரம் அதனிடம் இல்லை. ஜனாதிபதியிடமே இதற்கான அதிகாரம் உள்ளது.

அவதானிகள் இத்தகவலை வெளியிட்டனர்.

பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் (அவசரகாலச் சட்டத்தின்) கீழ் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பாவித்து அப்போதைய ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா பொருளாதார தடைக்கான பிரகடனத்தை வர்த்தமானி மூலம் விடுத்திருந்தார்.

இது தொடர்பான சில மாற்றங்கள் புதிய தடைகள் என்பன தற்போதைய ஜனாதிபதியான டி.பி. விஜேதுங்காவினாலும் அவ்வப்போது விடுக்கப்பட்டன.

தற்போதும் தொடர்ந்தும் பாதுகாப்பு அமைச்சர் பொறுப்பை ஜனாதிபதி டி.பி.

(4 ஆம் பக்கம் பார்க்க)

வடமத்திய மாகாணத்தின் ஆளுநராக மைத்திரிபால

கொழும்பு, ஓக. 25

வடமத்திய மாகாண ஆளுநராக மைத்திரிபால சேனநாயக்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

1970-1977 காலப் பகுதியில் ஸ்ரீ.ல.சு.க. அரசாங்கத்தில் அமைச்சராகப் பணிபுரிந்த இவர் கடந்த தேர்தலின் போது பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேசியபட்டியலில் இடம்பெற்றிருந்தார். எனினும் தேர்தல் முடிந்த பின்னர் தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்ட இறுதித் தேசியப் பட்டியலில் அவரது பெயர் அகற்றப்பட்டிருந்தது.

இதேவேளை—

தற்போது வடமத்திய மாகாண ஆளுநராக இவரைப் பணிபுரிந்து வந்த ஈ.எல்.பி. ஹுருல்லே திரு. லயனல் பெர்னாண்டோவின் இடத்துக்கு வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப் பட்டிருக்கிறார். (உ-எ-6)

வடமராட்சியில் கடற்படை தாக்குதல்

நாகர்கோவில கடலில் மீனவரைக் காணவில்லை

வடமராட்சி, ஓக. 25

வடமராட்சிப் பகுதியில் ஸ்ரீலங்கா கடற்படையினரின் அட்டகாசம் கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளது.

வடமராட்சி கிழக்கிலுள்ள நாகர் கோவில் கடற் பகுதியில் ரோந்து வந்த ஸ்ரீலங்கா கடற்படையினர் நேற்றுக் காலை சுமார் 5-30 மணியளவில் கடுமையான தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதல்களை அடுத்து அப்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த சேதலிங்கத்தின் மகனான இராமு (21 வயது) என்பவரைக் காணவில்லை. அவருக்கு என்ன நடந்தது என்பது குறித்த சரியான தகவல் ஏதும் தெரியவரவில்லை.

—காணாமல் போன இம் மீனவர் அணிந்திருந்த சாரமும், பனியனும் கைவிடப்பட்ட நிலையில் இருந்த கட்டுமரத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

கே. பி. இரத்னாயக்காவுடன்

சபாநாயகர் பதவிக்கு அனுராவும் போட்டி!

இன்று இரகசிய வாக்கெடுப்பு

கொழும்பு, ஓக. 25

புதிய நாடாளுமன்றத்தின் சபாநாயகர் பதவிக்கு ஐ.தே.க. சார்பில் அனுரா பண்டாரநாயக்காவை நிறுத்துவது என்று ஐ.தே.க. நாடாளுமன்றக் குழு தீர்மானித்துள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் முன்னாள் அமைச்சர் கே.பி. இரத்னாயக்கா போட்டியிடுகிறார்.

இன்று முதல் தடவையாகக் கூடும் புதிய நாடாளுமன்றத்தில், சபாநாயகரைத் தெரிவு

(4 ஆம் பக்கம் பார்க்க)

எதிர்க்கட்சித் தலைவராக காமினி!

3 வாக்குகளால் ரணில் தோல்வி!!

கொழும்பு, ஓக. 25

புதிய எதிர்க்கட்சித் தலைவராக காமினி திஸநாயக்கா தெரிவு செய்யப்பட்டார்.

கடும் போட்டிக்கு மத்தியில் நடைபெற்ற எதிர்க் கட்சித் தலைவர் தெரிவில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மூன்று வாக்குகளினால் காமினி திஸநாயக்காவிடம் தோற்றுப் போனார்.

எதிர்க்கட்சித் தலைவராக தெரிவாகியுள்ள திரு.காமினி திஸநாயக்காவே ஐ.தே.கட்சியின் துணைத் தலைவராகவும் இருப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டி நிலையால் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பெரும் முரண்பாடுகள் தோன்றியிருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

புதிய எதிர்க்கட்சித் தலைவரை ஏகமனதாகத் தெரிவு செய்ய முடியாத நிலையில், ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 87 பேரும் நேற்றுக் காலை வாக்களிப்பு மூலம் புதிய எதிர்க் கட்சித் தலைவரைத் தெரிவு செய்தனர்.

ஜனாதிபதி செயலகத்தில் ஐ.தே.க. தலைவரான ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா தலைமையில் ஐ.தே.க நாடாளுமன்றக் குழுவின் கூட்டம் நடைபெற்றது.

காமினி திஸாநாயக்காவுக்கு ஆதரவாக 45 எம்.பிக்களும் ரணில் விக்கிரமசிங்காவுக்கு ஆதரவாக 42 எம்.பிக்களும் வாக்களித்தனர். (உ-4)

ஐ.தே.கவில் விரிசல் மேலும் விரிவடையும்

எதிரணிக்குள் ஓர் எதிரணி

கொழும்பு, ஓக. 25

காமினி திஸநாயக்கா ஐ.தே.க. நாடாளுமன்றக் குழுவின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளது அக்கட்சியில் உள்ள பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக காமினி — ரணில் அணிகளுக்கு இடையேயான விரிசலை மேலும் விரிவுபடுத்தும்.

பி.பி.ஸி சிங்களச் செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ மேற்கண்டவாறு தமது ஆய்வுரையில் தெரிவித்தார்.

கடந்த தேர்தலில் ஐ.தே.க. தோல்வி அடைவதற்கு காரணம் அனுராவைச் சேர்த்ததே என்று காமினி குற்றஞ்சாட்டியுள்ளார். அனுரா பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இருந்திருப்பின் ஐ.தே.க நிச்சயம் வெற்றியீட்டியிருக்கும் என்பது காமினியின் கணிப்பு.

காமினியின் இந்தக் கூற்று அனுராவை சோதிக்க சிறிசேன கூரே மற்றும் ரணில் [illegible]

(4 ஆம் பக்கம் பார்க்க)

'லேக்ஹவுஸ்' தலைவராக லயனல் பெர்னாண்டோ

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநராக இதுவரைப் பணியாற்றி வந்த லயனல் பெர்னாண்டோ அரசின் கட்டுப்பாட்டிலுள்ள "லேக்ஹவுஸ்" பத்திரிகை நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இப்பதவிக்கு மேலதிகமாக தகவல் சுற்றுலாத்துறைமற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் புதிய செயலாளராகவும் அவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இவர் முன்னாள் அரசு அதிபரும் சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரியும் ஆவார்.

இதேவேளை—

பிரபல சட்டத்தரணி பேர்சி விக்கிரமசேகரா. லங்காதீப இணையாசிரியர் லக்ஷ்மன் ஜயவர்த்தனா ஆகியோர் இன்று "லேக் ஹவுஸ்" நிறுவன பணிப்பாளர்களாக பதவியேற்க உள்ளனர்

லக்ஷ்மன் ஜயவர்த்தனா, லேக்ஹவுஸ் ஆசிரியபீடத்தில் பல ஆண்டுகள் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. 1977 இல் ஐ.தே.க பதவிக்கு வந்தவுடன் இவரும் மற்றும் 16 பேரும் லேக்ஹவுஸ் நிறுவனத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். (உ-எ-6)

நாடாளுமன்றில் 12 பெண் எம்.பிக்கள்!

கொழும்பு, ஓக. 25

புதிய நாடாளுமன்றத்தில் 12 பெண் எம்.பிகள் இருக்கிறார்கள். இவர்களில் ஒருவர் பிரதமர் சந்திரிகா.

புதிய எம்.பிக்களாக 88 பேர் இம்முறை தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். (ஓ-எ)

மா, சீனியுடன் மாஹோ புறப்பாடு

யாழ்ப்பாணம், ஓக. 25

'மாஹோ' கப்பல் நேற்றிரவு கொழும்பு துறைமுகத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி புறப்பட இருந்ததாக நேற்று மாலையில் யாழ் செயலகத்திற்கு கிடைத்த தகவல் ஒன்று தெரிவித்தது.

இக் கப்பலில் 500 மெற்றிக் தொன் மா, 2 ஆயிரம் மெற்றிக் தொன் சீனி மற்றும் பொருள்கள் எடுத்து வரப்படுகின்றன. (ஓ-4)

படையினரின் சூட்டுக்கு பண்டத்தரிப்பில் ஒருவர் பலி

யாழ்ப்பாணம், ஓக. 25

விறகு எடுத்து வருவதற்காக தமது வயற்காணிப் பகுதிக்குச் சென்றவர், இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டில் [illegible] வேயே மரணமானார்.

இச்சம்பவம் [illegible] கீரிமலை வீதியில் நேற்று பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் பண்டத்தரிப்பு கீரிமலை வீதிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து சுதுமலை தெற்கில் வசித்த செல்லத்துரை திருநாவுக்கரசு (வயது 47) என்பவரே உயிரிழந்தார். (உ-15)

புதிய சபாநாயகர் தெரிவு:

கூட்டணி, புளொட் முன்னணிக்கு ஆதரவு

கொழும்பு, ஓக. 25

சபாநாயகர் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளருக்கே கிடைக்கும்.

கூட்டணி நிர்வாகச் செயலாளரும் திருமலை மாவட்ட எம்.பியுமான திரு அ. தங்கத்துரை இதனை தெரிவித்தார்.

கூட்டணி எம்.பிக்கள் நேற்றுக் கூடி இதுபற்றி ஆராய்ந்த முடிவு எடுத்தனர்.

இதேவேளை —

சபாநாயகர் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் கே.பி. இரத்னாயக்காவை ஆதரிப்பதென புளொட் அமைப்பு தீர்மானித்துள்ளது.

அமைப்பின் தலைவர் திரு. த. சித்தார்த்தன் இத்தகவலை தெரிவித்தார்.

'ஹபரணை' கப்பலில் உரம் எடுத்து வர நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 25

வடக்குக்கு புதிதாக சேவையில் ஈடுபடவிருக்கும் 'ஹபரணை'' கப்பலில் உரம் எடுத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

யாழ் மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான உரம் எடுத்து வரும் பணியில் ஈடுபட்டிருந்த 'ருஹுணு' கப்பல் பாகிஸ்தானுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது

அதைத் தொடர்ந்தே புதிதாக சேவையில் ஈடுபடவிருக்கும் 'ஹபரணை' கப்பலில் உடனடியாக உரம் எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுமார் 2 ஆயிரம் மெற்றிக் தொன் நிறையுடைய இக்கப்பல் அடுத்த வாரம் கொழும்பு துறைமுகத்தில் உர வகைகளை ஏற்றும் பணியில் ஈடுபடும் என்று தெரிவிக்கப்பட்டது (ஓ-3)

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

சிங்கர் டீப்பிறீசர் 300 லீற்றர், 400 லீற்றர் (Singer Deep Freezer 300, Litres, 400 Litres) விற்பனைக்குண்டு. இல.27 [157/1], ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[32539]

இரண்டு மாதம் நிரம்பிய ஆண், பெண் பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. இராசகுலேந்திரம், இல. 9, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (அடைக்கல மாதா கோயில் பக்கம்)

(32490)

சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஹீரோ லேடீஸ் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. ஸ்ரான்லி கல்லூரிக்கு முன்பாக உள்ள சைக்கிள் கடையில் பார்வையிடலாம்.

(32545)

தேவை

சோயாக்காய் பவுடர், பற்பொடி, நீலம், கச்சான் அல்வா மற்றும் இனிப்பு வகைகள் சைக்கிளில் வியாபாரம் செய்யக்கூடியவர்கள் தேவை. சக்தி கைத்தொழில் நிலையம், பாடசாலை வீதி, ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை.

(32533)

பயிற்சி பெற்ற பாலர் ஆசிரியை தேவை. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தராதரப் பத்திரங்களுடன் 31-8-94 காலை 9-00 மணிக்கு நேரில் சமுகம் தரவும். முருகானந்தா சனசமூக நிலையம், முருகமூர்த்தி கோயில் வீதி, நவாலி. (32553)

வெளிவந்துவிட்டது

துரித மீட்டலுக்கான சைவநெறி வினா-விடை ஆண்டு 11 ஆக்கம்: க. சந்திரசேகரம் வெளியீடு:- சோதி பொத்தகசாலை, கச்சாய் வீதி, சாவகச்சேரி. ஏகவிநியோகத்தர்கள்: ஸ்ரீ சுப்பிரமணிய பொத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-8920)

உற்சவகால விற்பனை

இந்திய, இலங்கை நாவல்கள் தொகையாகவும், சில்லறையாகவும், சிவம் நீதிக் கதைகள், 1, 2, 3, 4, 5, 6 பாகம் புதியவை. சமய புராணப் புத்தகங்கள், இந்திய சஞ்சிகைகள் விற்று முடிப்பதற்கான மலிவு விலையில் ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர்

[சி-8678]

ஜெயா அழகு மாடம்

ஜெயா அழகு மாடம் (ஜெயா பாஷன் ஹவுஸ்) எமது ஸ்தாபனத்தின் காட்சியகமும், விற்பனையகமும் நல்லூரில் அமைந்துள்ளது. வாடிக்கையாளர்களை அன்புடன் அழைக்கின்றோம். பொருண்மிய மேம்பாட்டுக் கழக காட்சியகத்தின் வடக்கு பக்கமாக அமைந்துள்ளது.

(சி/8693)

கணக்கு இலிகிதர் தேவை

கணக்கியலைப் பாடமாகக் கொண்டு க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தி எய்தியவர்கள் விண்ணப்பிக்கலாம். அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். கீழ்வரும் முகவரிக்கு உடன் விண்ணப்பிக்கவும்; அல்லது நேரில் வரவும். இல. 140, பலாலி வீதி, திருநெல்வேலி. (32534)

மணிக்கூடுகள் தேவை

உதிரிப்பாகங்களுக்காக பாவித்த நல்ல நிலையில் உள்ள மணிக்கூடுகள் வாங்கப்படும். சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்தப்படும். டிலகா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளைகள்: ஆறுகால் மடம் ஆனைக்கோட்டை, கண்டி வீதி, சாவகச்சேரி.

(சி-8686)

உ
அம்பாள் துணை

கர்பவாருதி அவர்களை வரவேற்று வாழ்த்துகிறோம்

ஆவைப்போல் நெஞ்சம் ஆசலித்தும் கம்பனது தாளைப் பணிவதுவே தன்வேலை என்று எழுந்து நல்ல பணிகளுக்கு நாயகனாய்ச் சேவகனாய் சொல்லும் படிவந்து சுடர்கின்ற ஓர் பிறவி பார்த்தால் சிரிப்பும் பழகிவிட்டால் பாசமதும் வார்த்தைகளைக் கேட்டால் வணங்குகின்ற தேவையதும் தோன்றும்

ஜெயராஜ் அவர்கள்
வடமராட்சி-வதிரி உல்லிய நெல்லை
அம்பாள் ஆலய
அலங்கார உற்சவத்தை முன்னிட்டு
இன்று தொடக்கம் தொடர்ந்து பதினைந்து தினங்கள் வரை தினமும் மாலை 7-30மணி 8-30மணி வரை

மகாபாரத

தொடர் விரிவுரை நிகழ்த்தவிருக்கிறார்
அவர் வடமராட்சியில் முதன் முதல் நிகழ்த்துகின்ற மகாபாரத விரிவுரை என்ற வகையில்
அவரை நாங்கள் வாழ்த்தி வரவேற்கிறோம்

வடமராட்சி
இயல்துறை ஆர்வலர்கள்,

[32505]

---

4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு:	இறப்பு:
20	08
08	09
1918	1990

அமரர்

வேலுப்பிள்ளை பாலகிருஷ்ணன்

(தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை)

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து நான்கு ஆண்டுகள் சென்றாலும், உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களை விட்டு என்றும் அகலாது.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

51, திருவேரகம்,
ஸ்ரேசன் றோட்,
சுன்னாகம்.

(7716)

6ஆம் மாத நினைவஞ்சலி பிறந்ததின நினைவஞ்சலி

அமரர்

பிரான்சிஸ் ஜோசவ்

மலர்வு; 10-05-1917
உதிர்வு: 25-02 1994

அமரர்

ஞாயிஸ் குணமணி ஜோசவ்

மலர்வு: 25 08 1927
உதிர்வு: 29-05 1994

கற்பனைக்கு எட்டாத வாழ்வுதனைத் தந்துவிட்டு
கண்ணீரில் மூழ்கவிட்டுச் சென்றீர்களே
மறக்குமோ எம்நெஞ்சம்
மாறுமோ எம்துயரம்

உங்கள் ஆத்மா சாந்திபெற அஞ்சலித்து நிற்கும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

28/3, ஆசீர்வாதப்பர் கோயிலடி,
கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(32550)

நல்லூரில்

தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவன கண்காட்சி

வாருங்கள்! பாருங்கள்!!
ஆதரவு தாருங்கள்!!!
சவர்க்கார உற்பத்தி முன்னோடி
'மில்க்வைற்' நிறுவனத்தின் காட்சிச்சாலை
தங்கள் நல்வரவுக்கு காத்திருக்கிறது.

(சி-8936)

இடைக்காடு மகா வித்தியாலயம்

பழைய மாணவர் சங்கம் ஆண்டிறுதிப் பொதுக் கூட்டம்-1994

இடம்: இடைக்காடு மகா வித்தியாலயம், நீர்வேலி
காலம்: 27-08-94 காலை 8-30மணி
தலைவர் திருமதி வி. தெய்வேந்திரம் (அதிபர்)

சகல ப. மா. ச உறுப்பினர்களும் இ. ம. வி. ஆசிரியர்களும் தவறாது சமுகம் அளிக்கும்படி அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

செயலாளர், தலைவர்,
பழையமாணவர் சங்கம்,
இடைக்காடு மகாவித்தியாலயம்.

[7720]

அம்பாள் துணை

வதிரி, உல்லியநெல்லை அம்பாள் வருடாந்த அலங்கார உற்சவம்

ஆவணி மாதம் 25 ஆம்திகதி முதல் புரட்டாதி 8ஆம் திகதி வரை (25-08-94 – 08-09 94) தொடர்ந்து 15 தினங்கள் தினமும் மாலை 7-30 மணி முதல் 9-00 மணி வரை

"மகாபாரதம்"

தொடர்விரிவுரை
நிகழ்த்துபவர் கம்பவாருதி
இ. ஜெயராஜ்
அவர்கள்

நிகழ்ச்சி குறித்த நேரத்தில் ஆரம்பமாகும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
- ஆலய பரிபாலனசபை,

(32546)

பெயர் மாற்றம்

"திலகா ஜுவலர்ஸ்"

என்ற பெயரில் இயங்கிய எமது ஸ்தாபனம்
சிறிது கால இடைவெளிக்குப்பின் அதே முகவரியில்

"திலகா நகை அகம்"

என்ற பெயரில் மீண்டும் இயங்குகிறது.

வாடிக்கையாளர் அனைவரும் முன்னர் போல் எமக்கு ஆதரவுதருவீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்,

✻ வாடிக்கையாளர்கள் இந்தப் பெயர் மாற்றத்தைக் கவனிக்கவும்.

திலகா நகை அகம்
240, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இராமலிங்கம் கமலநாதன்.
(உரிமையாளர்)

(32558)

எட்டாம் ஆண்டு இதய அஞ்சலி

அன்னை மடியில்:	ஆண்டவன் இணைப்பில்:
03	25
02	08
1956	1986

செல்வி சத்தியபாமா விஸ்வலிங்கம்

[யாழ். ஹற்றன் தேசிய வங்கி]

திதி. 27-08-1994

தில்லை நடேசன் திருப்பாதம் பற்றுதற்கோ
மல்லல் புகழ் சூரியனோடு விரைந்தனை-
பாமா – நீ
அன்னை நிறை மேதினியில் அர்ப்பணமா?
உத்தமியே
பல்லாண்டு சென்றாலும் மறவோமே
உம் வதனம்

நினைந்து உருகும்:
பெற்றோரும், உடன்பிறந்தோரும்
அத்தான்மாரும், பெறாமக்களும்,
அத்தையும், அண்ணாவும்,
அம்மம்மாவும்.

"யமுனா"
ஆனைக்கோட்டை.

[32535]

வீரவணக்கக் கூட்டமும் நினைவுக் கல் நடுகையும்

கடந்த 16 ஆம் திகதி காங்கேசன்துறை துறைமுகத்தினுள் ஊடுருவிச் சென்று கடற்படைத் தாய்க்கப்பலையும், அதிவேக டோறாப் படகையும் தகர்த்து வீரச்சாவடைந்த முதலாவது பெண் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணியின் வீரவணக்கக் கூட்டமும், நினைவுக் கல் நடுகையும் நாளை (வெள்ளி) நடைபெறவுள்ளன.

கொக்குவில் மேற்கில் உள்ள அவரது தற்போதைய வதிவிடத்தில் இருந்து அவரது உருவப்படம் பிற்பகல் 4 மணியளவில் அணிவகுப்பு மரியாதைகளுடன் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு கொக்குவில் மேற்கு ஞானபண்டிதர் வித்தியாலயத்தில் மக்களின் இறுதி வீரவணக்கத்திற்காக வைக்கப்படும். அங்கு வீரவணக்கக் கூட்டம் இடம்பெறும்.

பின்னர் உருவப்படம் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, இறுதி இராணுவ மரியாதைகளுடன் அங்கு நினைவுக் கல் நட்டப்படும். (ஐ)

யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தில் 1993/94 கல்வியாண்டின் புதிய மாணவர்களுக்கான விரிவுரைகள் 12-09-1994 இல் ஆரம்பமாகவுள்ளன. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் விவசாய கற்கை நெறிக்குத் தம்மைப் பதிவு செய்துகொண்ட மாணவர்கள் அனைவரும் 11-9-94 ஆம் திகதி கிளிநொச்சி விவசாய பீடத்தில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்

(ஐ/8939)

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

பழைய மாணவர் சங்கம் ஆண்டுப் பொதுக் கூட்டம்

மேற்படி சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் 11-09-94 ஞாயிறு முற்பகல் 9.30 மணிக்கு பாடசாலைப் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது சமுகந் தருமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம்.

குறிப்பு:- பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் பிரேரணைகளை 03-09-94இற்கு முன்னர் செயலாளரிடம் ஒப்படைக்கவும்.

பொ. தர்மேந்திரன்
(செயலாளர்)

பழைய மாணவர் சங்கம்,
யா / கனகரத்தினம் ம. ம. வித்தியாலயம்,
யாழ்ப்பாணம். 25-8-1994

[32561]

பதவி வெற்றிடம்

பாதுகாப்பு உத்தியோகஸ்தர்

பின்வரும் தகைமைகள் உடையோர் சுய குறிப்புடன் உறவினரல்லாத இரு நடுவர்களின் பெயரைக் குறிப்பிட்டு 31-08-1994 இற்கு முன் விண்ணப்பிக்கவும்;

1. கல்வித்தகைமை
   ஜி. சீ. ஈ. (சாதாரண தரப்) பரீட்சையில் தமிழ் மொழி, கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி,
2. வயது 24 முதல் 45 வரை
3. உயரம் 5 அடி 4 அங்குலத்துக்குக் குறையாமல்
4. சிறந்த ஒழுக்கம்

ஓய்வுபெற்ற அரசபடை சேவையாளர்கள் (Ex - Servicemen) பாதுகாப்புச் சேவையில் முன் அனுபவமுள்ளோர் ஆகியோருக்கு வயதெல்லைக் கட்டுப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்படும்.

அருண் பாதுகாப்புச் சேவை
இல. 19 இரண்டாவது ஒழுங்கை,
மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்,

(ஐ/8937)

சைன் கல்வியகம்

(கிறிஸ்தவக் கல்லூரி முன்பாக)
பருத்தித்துறை வீதி, கோப்பாய்

பெண்கள் ஆண்களுக்கான மனையியல், கைத்திறன் டிப்ளோமா பயிற்சிகள்

தையற்கலை, சமையற்கலை, பூவேலை, கைப்பணி
கேக் ஐசிங் கூந்தல் அலங்காரம்
ஆகியவற்றுக்கான

புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன

தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு பயிற்சி முடிவில்
Diploma in Home Economics and Fine Arts
சான்றிதழ்கள் வழங்கப்படும்;
மற்றும்
இசை, நடன வாத்திய பயிற்சி வகுப்புகள்
தகுதி வாய்ந்த அனுபவமுள்ள இசை பேராசிரியர்களினால்
"இசை வித்தக சபை, இசைப் பேரவை"
அனுசரணையுடன்
வாய்ப்பாட்டு, வயலின், வீணை, நடனம், மிருதங்கம்
ஆகிய வகுப்புகள் நடத்தப்படவுள்ளன
சகல வகுப்புக்களின் அனுமதிகள் 30-08-1994ற்கு முன்பு கோரப்படுகின்றன;

புதிய வகுப்புகள் ஆரம்பம்:
03-09-1994 சனிக்கிழமை
காலை 9 மணி

அன்றைய தினம் உங்களுடைய நேரசூசியை பெற்றுக் கொள்ளவும்.

தொடர்பு: R. சற்குணராஜா
நிர்வாகி

(32560)

யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம், உதயன்

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

விஜேதுங்கா இறங்குவாரா?

இம் மாதம் பதினாறாம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில், தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக்கொண்ட சபை—புதிய நாடாளுமன்றம் - இன்று கூடுகிறது.

முறைப்படி, மூத்த உறுப்பினர் ஒருவரின் தலைமையில் மக்கள் பிரதிநிதிகள் முதலில் கூடி சபாநாயகரைத் தெரிவு செய்வர்.

அதன் பின்னர், புதிய நாடாளுமன்றத்தை ஜனாதிபதி அல்லது மகாதேசாதிபதி அங்குரார்ப்பணம் செய்து வைத்து புதிய அரசின் கொள்கையை பிரகடனப்படுத்துவதே வழமையான நாடாளுமன்ற மரபு.

ஆனால் நாளை நாடாளுமன்றஅங்குரார்ப்பணச்சம்பிரதாய பூர்வமாக— வைபவ ரீதியாக— நடைபெற மாட்டாது என்று நாடாளுமன்ற சயலாளர் நாயகம் அறிவித்திருக்கிறார்.

நாடாளுமன்றத்தை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்துப் புதிய அரசின் கொள்கைப் பிரகடனத்தை வாசித்தற்கு ஜனாதிபதி விஜேதுங்கா விரும்பவில்லை என்றும், அதனாலேயே சம்பிரதாய பூர்வமான நிகழ்வுகள் இன்று நடைபெறமாட்டா என்றும் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்

ஜனாதிபதி விஜேதுங்கா, பொதுத்தேர்தலில் தோல்வி அடைந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர். அதனால் தனது மாற்றுக் கட்சியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கொள்கைப் பிரகடனத்தை வாசித்து, அதனைத் தனது அரசின் கொள்கை என்று மக்களுக்கு அறிவிக்க விரும்பாதிருக்கலாம்.

நாட்டின் தலைவர் என்ற வகையில் கட்சி நிலைக்கு அப்பாற்பட்டு நின்று மக்களுக்கும் பணிபுரிவதற்கு விஜேதுங்கா விரும்பவில்லை என்றால் —

புதிய அரசாங்கத்தை — நாடாளுமன்றத்தை — அனுசரித்து நடந்து, மக்களுக்குச் சேவை செய்வதென்ற கொள்கையளவில் விஜேதுங்கா விரும்பவில்லையானால் —

அவர் தமது பதவியிலிருந்து விலகுவதே. அரசியல் கனவான் தனம்.

அவரது தலைமையின் கீழ் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியை தேர்தலில் மக்கள் நிராகரித்து விட்டதால், அவர் தமது பதவியிலிருந்து விலகுவது அவருக்குள்ள தார்மீகப் பொறுப்புமாகும்.

அந்தப் பொறுப்பை உணர்ந்து அவர் பதவியிலிருந்து விலகுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருவதாகவே கொழும்பு அரசியல் கட்சிகள் தெரிகின்றன.

ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் நடைபெறும் என்ற நிலை இருந்த போது, தனக்குப் பக்கபலமாக கண்டியரான காமினி திஸநாயக்காவை ஐக்கிய தேசியக் கட்சிக்குள் கொண்டு வந்து சேர்த்தவர் விஜேதுங்கா, தனக்கு அடுத்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவி காமினிக்கு மாற வேண்டும் என்பதே அவரது சொந்த விருப்பமாக இருந்தது.

அந்த விருப்பம் நிறைவேறுவதற்கான அடித்தளம் நேற்று காலை போடப்பட்டு விட்டது. ஐ. தே. கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவராக — எதிர்க் கட்சித் தலைவராக— காமினி திஸநாயக்கா தெரிவு செய்யப் பட்டுள்ளார்; குறுக்கு வழி— தில்லு முல்லு ''வீரனான'' அவர் விரைவில் கட்சியின் தலைவராகி விடுவார் என்று எதிர் பார்க்கலாம்.

சந்திரிகாவும் கண்டியச் சிங்களவர் என்று கருதப்படக் கூடியவர். அவருக்கு முட்டுக் கட்டையாக இருக்காமல், அவரிடம் இருந்து சில வாக்குறுதிகளைப் பெற்றுக் கொண்டு, விஜேதுங்கா தமது ஆசனத்தைக் காலி செய்து, சுமுகமான ஆட்சி மாற்றத்துக்கு வழி விடுவார் என்று நம்ப இடமுண்டு.

சாரணருக்கு ஜனாதிபதி சின்னம் வழங்கும் வைபவத்தில் விஜேதுங்கா கலந்து கொள்ள இருந்தார். அந்த நிகழ்ச்சி பின்போடப்பட்டு விட்டதாக, அறிவிக்கப்பட்டுள்ளது. விஜேதுங்கா இன்று வியாழக்கிழமை ராஜினாமா செய்தால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை என்பதனை அது கோடிட்டுக்காட்டுகிறது.

பாகிஸ்தானிடம் அணுகுண்டு!

நவாஸ் ஷெரிப் தகவல்!!

இஸ்லாமபாத், ஒக. 25

பாகிஸ்தானிடம் அணுகுண்டு இருப்பதாக அந் நாட்டின் முன்னாள் பிரதமர் திரு. நவாஸ்ஷெரிப் தெரிவித்திருக்கிறார். பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீர் பகுதியில் நீளம்பட் என்னுமிடத்தில் நடந்த பேரணி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் நவாஸ் ஷெரீப் இத் தகவலை வெளியிட்டார்.

ஆனால் பெனாஸிர் மறுக்கிறார்

காஷ்மீரில் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக அரசியல் கட்சி ஒன்றுக்கு பாகிஸ்தான் அரசு பெருமளவு நிதி வழங்கியிருப்பதாகவும் திரு. நவாஸ் ஷெரீப் தகவல் வெளியிட்டுள்ளார்.

பாகிஸ்தானிடம் அணுகுண்டு இருக்கிறது என்ற நவாஸ் ஷெரிப்பின் கூற்று அமெரிக்காவுக்கு ஆச்சரியம் தரவில்லை என்றும் -

இந்த அறிவிப்பு பாகிஸ்தானின் உள்நாட்டு அரசியலுடன் அவர் கொண்டுள்ள போட்டியுடன் தொடர்புடையது என்றும் அமெரிக்க அரசு அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டார்:

முன்னாள் பிரதமர் ஒருவரின் இந்தக் கூற்றுகள் பாகிஸ்தானின் அணு ஆயுத விவகாரத்தில் சர்வதேச கவனத்தை ஈர்த்திருப்பதுடன் பெனாஸிர் பூட்டோ அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ)

முதலாவது

பெண்கடற் கரும்புலிக்கு வீரவணக்க நிகழ்வுகள்

தமிழீழம் எங்கும் இரு தினங்கள்

யாழ்ப்பாணம், ஒக. 25

காங்கேசன்துறைக் கடலில், ஸ்ரீலங்காக் கடற்படையின் கட்டளையிடும் தலைமைத் தாய்க் கப்பலையும் —

அதற்கு துணைநின்ற அதிவேக டோறா பீரங்கிப் படகையும் — தகர்த்தெறிந்து சிங்கள கடற்படையினர் பலரைக் கொன்று வீரசாதனை படைத்து வீரச்சாவைத் தழுவிக் கொண்ட முதற் பெண் கடற் கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணியின் வெற்றி நினைவாக நாளை 26ஆம் திகதியும், நாளை மறுதினம் 27 ஆம் திகதியும் தமிழீழம் எங்கும் வீரவணக்கம் செலுத்தி நினைவு கூரப்படுகின்றது.

இவ்விரண்டு நாட்களிலும் தமிழீழத்தின் இடங்கள் தோறும் இக்காவிய நாயகர்களின் உருவப்படங்களை வைத்து சுடர் ஏற்றியும் —

மலர் சாத்தியும் —

தமிழீழ வீதிகளெங்கும் கறுப்பு, சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டியும் —

சந்திகள் தோறும் கரும்புலிகளது எழுச்சிப் பாடல்களை இசைத்தும் —

இம் மாவீரரின் உருவப் படம் தாங்கிய ஊர்தி பவனி வரும் வீதிகள் தோறும் விளக்கேற்றி மலர் தூவி வணக்கம் செலுத்தியும் —

இருநாளிலும் கோட்ட ரீதியாக நடைபெறும் வெற்றி வீரவணக்கக் கூட்டத்தில் அனைத்து மக்களும் பெருந்திரளாக கலந்து கொண்டும்— இக்கரும்புலியின் சாகசத்தை உலகெங்கும் பறைசாற்றி இவருக்கு எமது எழுச்சிபூர்வமான இறுதி வீரவணக்கத்தை செலுத்திக் கொள்வோம் என்று யாழ் மாவட்டம் தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு இளம்பரிதி அறிக்கை ஒன்றின் மூலம் கோரி உள்ளார்.

(இ)

''வேதமுரசு'' தொகுப்பு நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக. 25

நல்லை ஆதீனத்தில் எதிர்வரும் செப்டம்பர் முதலாம் திகதி ''வேதமுரசு'' தொகுப்பு நூல் வெளியீடு நடைபெறும். (ஈ-30)

தேர்தலின் போது

அமைச்சர்கள், வேட்பாளரால் அரச வாகனம் துஷ்பிரயோகம்

அவதானிகள் குழு தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 25

தேர்தலின் போது அமைச்சர்களும் ஆளும் கட்சி வேட்பாளர்களும் அரச உடைமைகளையும் வாகனங்களையும் பயன்படுத்துவது பூரணமாக நிறுத்தப்பட வேண்டும் என்று நடந்து முடிந்த தேர்தலைக் கண்காணிக்க வந்திருந்த சர்வதேச அவதானிகள் குழு பரிந்துரை செய்துள்ளது.

நடந்து முடிந்த தேர்தலின் போது அமைச்சர்களும் ஆளும் கட்சியினரும் அரச உடைமைகளையும் வாகனங்களையும் பயன்படுத்திய சந்தர்ப்பங்களை தாங்கள் அவதானிக்க முடிந்தது என்றும் அவதானிகள் குழு தெரிவித்துள்ளது.

குழுவின் அறிக்கையில் இத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (இ-எ-9)

தமிழர் பிரச்சினை தீர்க்க வேண்டும் என்ற தெளிவான உறுதி சந்திரிக்காவிடம் உண்டு

பி. பி. ஸி கண்ணோட்டம்

''தமிழர் பிரச்சினையில் சந்திரிகாவின் மன ஊசல்'' என்ற தலைப்பில் பி. பி. ஸி. கொழும்புச் செய்தியாளர் ஜோர்ச் ஆர்னி அளித்த கண்ணோட்டம் வருமாறு:-

இலங்கையில் தமிழ் பிரிவினைவாதப் போராட்டம் தொடங்கியதற்கு காரணம், இரண்டு முக்கிய கட்சிகளுமே சிங்கள இனவாதத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது தான்.

இதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஒருவகையில் காரணம் என்பதை சந்திரிகா குமாரணதுங்க ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இது அவரது சிறந்த பண்பைக் காட்டுகிறது.

சிங்களம் மட்டும் சட்டம்

1956ஆம் ஆண்டு சிங்களம் மட்டுமே ஆட்சி மொழிச் சட்டம் மூலம் அவரது தந்தை எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா சிறுபான்மைத் தமிழரின் உள்ளக் குமுறல்கள் பெருக வழி வகுத்தார்.

20 ஆண்டுகளுக்கு பின்னர் சந்திரிகாவின் அன்னை ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா சிங்கள மாணவர்கள் அல்லாத தமிழ் மாணவர்கள் பல்கலைக் கழகத்தில் சென்று படிப்பதைக் கடினமாக்கி எரிகின்ற தீயில் எண்ணெய் வார்த்தார்.

அந்த வேளையில் தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தத் தொடங்கினார்கள்.

ஐ. தே. கட்சியின் 17வருட ஆட்சியில் [illegible]—

கற்றுக் குட்டித் தனமாக— இருந்த புரட்சி, தனித்த தமிழீழம் கேட்கும் முழுமையான போராக மாறிவிட்டது.

இந்தப்பிரச்சினையை ஐ. தே. க. தீர்க்கத் தவறிவிட்டது. அதனால் தான் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் வெற்றியில் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

நிலைமை மிகவும் மோசமாகிப் போய்விட்டால், எந்த மாற்றமும் சில சமயம் நம்பிக்கைக்கு வழிவகுக்கும் என்பது உண்மையல்லவா!

சந்திரிகாவின் பண்புகள் இந்த நம்பிக்கையை பெரிதும் வளர்க்கின்றது.

இனவாதக் கொள்கையின் சாயல்கூட அவரிடம் இல்லை.

தமிழ்ப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்ற தெளிவான தனிப்பட்ட உறுதி அவருக்கு இருக்கிறது

காலஞ்சென்ற அவரது கணவன் திரைப்பட நடிகர் விஜய குமாரணதுங்க, வடக்கு— கிழக்கு யுத்தம் தொடங்கிய பின்னர்கூட யாழ்ப்பாணம் சென்று வந்த சில அரசியல்வாதிகளில் ஒருவர்.

அவரும், சந்திரிகாவும் 80 களில் தென் இந்தியாவில் தமிழ்ப் பிரிவினைவாதத் தலைவர்களைச் சந்தித்தார்கள்.

தேர்தல் பிரசாரம் தொடங்கிய போது, பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில், ''சிங்களவர்களில் பெரும்பான்மையானவர்கள் இனவெறி உடையவர்கள் அல்லர் என்று நாம் நினைப்பதாக'' சந்திரிகா கூறியிருந்தார்.

''ஒரு அரசியல் கட்சி முயற்சி செய்தால் தீர்வு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது'' என்றும் அவர் கூறினார்.

இனவாதச் சார்பு கட்சிகளுக்கு இந்த தேர்தலில் ஏற்பட்ட தோல்வி சந்திரிகா கூறியது சரியே என்பதை காட்டுகிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றால், நாடு பிளவுபட்டு விடும் என்று ஐ தே. க. விடுத்த எச்சரிக்கை எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை.

சிங்கள சார்பு மிக்க தினேஷ் குணவர்த்தனாவின் எம். ஈ. பி. எனப்படும் மக்கள் ஐக்கிய முன்னணி தேர்தலில் ஒரு தொகுதியில் கூட வெற்றி பெறவில்லை. மொத்தமாக அதற்கு நாடு முழுவதும் 68 ஆயிரம் வாக்குகளே கிடைத்தன.

சுயேச்சையாக போட்டியிட்ட தமிழ் வேட்பாளர்களுக்கும் இதே கதிதான்.

இனவாத அரசியல் ஒதுக்கப்பட்டு விட்டது

அண்மையில் நடந்த தேர்தலில் இனவாத அரசியல் ஒதுக்கப்பட்டு விட்டதாக தோன்றுகின்றது என்றே அரசியல் நோக்காளர்கள் கருதுகிறார்கள்.

தன் அரசியல் வாழ்வுக்காக சிறுபான்மைக் கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி. புளொட் போன்ற கட்சிகளை சார்ந்திருக்க வேண்டியுள்ளதால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு முதலிடம் தரப்போவதாக பிரதமர் கூறிய உறுதி நிறைவேற்ற வாய்ப்பேற்படுகிறது.

ஆனால் அவருடைய கட்சிக்குள்ளேயே சிங்கள இனவாத சார்பினர்கள் இருக்கின்றனர்

தீர்வு காண வேண்டும் மென்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் அறிக்கை கூறினாலும் அதற்கான உருப்படியான திட்டம் எதையும் இதுவரை முன்வைக்கவில்லை.

மாகாண எல்லைகளை மீண்டும் வரையறுத்து புதிய நிர்வாகப் பிரிவுகளை ஏற்படுத்தப் போவதாக தெளிவில்லாத ஒரு உறுதி மொழி கூறப்பட்டுள்ளது.

மாகாண எல்லைகளை மாற்றத் திட்டம்

வடக்கு - கிழக்கு மாகாணங்களை பிரிக்க வேண்டுமோ என்ற சர்ச்சையை மறைக்க பழைய எல்லைகளை மாற்றி புதிய மாகாணங்களை அமைப்பது என்ற கருத்தும் இருக்கிறது.

அப்படியானால் தமிழர் மிகுதியாகவுள்ள உச்சிதமான மாகாணங்களுக்கு அதிகாரம் பகிர்ந்து கொடுக்கும் திட்டமும் முன்வைக்கப்படலாம்.

ஆனால் கிழக்கே தமிழர். முஸ்லிம்கள், சிங்களவர்கள் கிட்டத்தட்ட சமமான எண்ணிக்கையில் இருக்கிறார்கள்.

இன அடிப்படையில் எல்லைகளை வகுத்தால், எல்லா இனத்தவரும் கடுமையாக எதிர்ப்பார்கள்.

தமிழ் மக்களிடையே ஆயுதப் போராட்டத்தை ஆதரிப்போர் ஜனநாயக முறையை ஆதரிப்போர் என்ற இரு பிரிவினர் இருக்கிறார்கள்.

சந்திரிகா வின் தமிழ் கட்சிக் கூட்டாளிகள் அரசியல் சாசனத்தின் 13 ஆம் திருத்தத்தை முழுமையாக செயல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துவதாக தெரிகிறது.

1987 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு அதிகாரம் பகிர்ந்து கொடுப்பதற்காக இப்போதைய மாகாண சபை அமைக்க வழிவகுத்த திருத்தம் அது.

ஆனால் 13 ஆம் திருத்தம் முழுமையாக செயல்படுத்தப் பட்டாலும் விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

முழு சுதந்திரம் இல்லாவிட்டாலும் சமஷ்டி முறையிலான ஒரு மாநிலமாவது வேண்டும் என்று விடுதலைப் புலிகள் கேட்கிறார்கள்.

(இ-3)

நாளை பார்ப்போம் என இருந்து விடாதீர்கள்
இன்றே வாருங்கள் நல்லூர் பொருண்மியக் கண்காட்சிக்கு

புலிகளின் குரல் வானொலியில்

25 - 08 - 1994
வியாழன் இரவு

- ★ 8-01 — சொல்லுங்கள் பார்க்கலாம்
- ★ 8-10 — சித்தமருத்துவ குறிப்புகள்
- ★ 8-20 — உழைப்போம் உயர்வோம் சுண்ணாம்பு உற்பத்தி தொடர்பான கேள்வி பதில்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — ஏட்டிலிருந்து — இயற்கை சமுதாயம் விஞ்ஞானம் என்ற நூலிலிருந்து ''விண்ணைப் பார்த்தால்'' எனும் கட்டுரையின் சில பகுதிகள்
- ★ 8-50 — மலரும் மொட்டுக்கள்

வெள்ளி காலை
26 — 08 — 1994

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — மணியாரம்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயகப் பாடல்கள்

இலவச தையல் பயிற்சி

யாழ்ப்பாணம், ஒக. 25

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் வேலைப் பிரிவினால் இலவச தையல் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பயிற்சி பெறவிரும்புவோர் கந்தர்மடம், பழம் வீதியில் இயங்கும் வேலைப் பிரிவு காரியாலயத்தில் தொடர்பு கொள்ளும்படி வேலைப் பிரிவு தொண்டர் தலைவர் தெரிவித்துள்ளார்.

(ஐ-15)

காங்கிரஸ் கமிட்டி தலைவராக திவாரி

புதுடில்லி, ஒக 25

உத்தரப் பிரதேச மாநில இந்திரா காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக என்.டி. திவாரியை, காங்கிரஸ் தலைமைப் பீடம் நியமித்துள்ளது. திரு. திவாரி இந்தியாவின் வெளியுறவு அமைச்சராகப் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

நல்லூர் ஆலயச் சூழலில் இன்று நடக்கும் நிகழ்வுகள்

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி பதின்நான்காம் திருவிழாவான இன்று ஆலயச் சுற்றாடலில் நடைபெறும் நிகழ்ச்சிகள் வருமாறு:

நாவலர் மணிமண்டப முன்றலில்

தெய்வீக இசை அரங்கு மாலை 6 — 7 மணிவரை எஸ். குலசிங்கம் இசைக் கச்சேரி, மாலை 7 — 8-30 மணிவரை வி. கே. கானமூர்த்தி, வி கே. பஞ்சமூர்த்தி குழுவினரின் மங்கள இசை.

நல்லை ஆதீனத்தில்

காலை 9-30 மணிக்கு— சமய தீட்சை. பிற்பகல் 2-00 மணிக்கு — சமயப் பேருரை, பிற்பகல் 3-00 மணிக்கு— புராணப் படிப்பு, மாலை 4-00 மணி முதல் — எஸ். இராமநாதன் இசைக்கச்சேரி இரவு 6 — 7 மணிவரை பிரசங்க பூஷணம் நடேசன் சிவசண்முகமூர்த்தியின் கந்தரனுபூதி ''அடியேன் அலைபடத் தகுமோ'' என்ற தலைப்பில் இசைப் பேருரை

மேற்கு வீதியில் உள்ள ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயத்தில்

மாலை 5-30மணிக்கு— சம்பூர்ண இராமாயணம் தெய்வீக இசைப் பேருரை ''இராம இராவண யுத்தம்'' என்ற தலைப்பில் பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா. (இ-111-30)

தேசிய தொழில் பயிலுநர் புதிதாக ஆட்சேர்ப்பு

தேசிய தொழில் பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை புதிதாகப் பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கவுள்ளது.

தையல் பயிற்சி, நூலக உதவியாளர், தச்சுத் தொழில் பொறிவலர், சைக்கிள், மோட்டார் சைக்கிள் திருத்தல், எழுதுவினைஞர், தமிழ், ஆங்கில சுருக்கெழுத்து, அச்சு இயந்திரம் டைப் வேலை போன்ற துறைகளில் ஆரம்பிக்கப்படவுள்ள பயிற்சி நெறிகளுக்கு புதிதாக ஆட்கள் சேர்க்கப்பட விருப்பதாக தேசிய தொழில் பயிலுநர் கைத்தொழில்பயிற்சி அதிகார சபையின் வடக்கு-கிழக்கு மாகாண பயிற்சி முகாமையாளர் திரு. ம. சிவயோகசுந்தரம் தெரிவித்தார்.

இவைதொடர்பானமேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் தம்மை அல்லது சிரேஷ்ட பகுதிப் பரிசோதகர் ஐ. ஜீ. பொன்னையா யாழ். செயலகத்தில் சந்தித்துப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-17)

உற்பத்தி நிறுவனங்களுக்கு மூலப் பொருள்கள் வழங்கல்

யாழ்ப்பாணம். ஒக. 25

தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தில் தம்மைப் பதிவு செய்து கொண்டுள்ள உற்பத்தி நிறுவனங்களுக்கு மூலப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிறுவனங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட பயிற்சி வகுப்புக்கள், கருத்தரங்குகள் முகாமைத்துவ, தொழில்நுட்ப ஆலோசனைகள் போன்ற ஒத்தாசைகளுடன் கடந்த இரு மாதங்களில் மட்டும் ரூபா 17லட்சத்து 80 ஆயிரம் பெறுமதியான உள்ளீடுகள் இலாப நோக்கின்றி வழங்கப்பட்டிருக்கின்றன.

எதிர்காலத்திலும் இவ்வாறு உள்ளீடுகள் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன,

தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தில் தங்களை பதிவு செய்து கொள்ளும் தொழில் முயற்சியாளர்கள் இந்த நன்மைகளை பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது. (எ)

சனசமூக நிலையங்களுக்கு 'பெற்றோமாக்ஸ்' விளக்கு

வலிகாமம் தெற்கு, ஒக. 25

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட ஏழாலை, சுன்னாகம், கந்தரோடை, உடுவில், சங்குவேலி, இணுவில், தாவடி போன்ற கிராமங்களிலுள்ள சுமார் முப்பது சனசமூக நிலையங்களுக்குபிரதேச சபை சமுதாய நிதியில் இருந்து பெற்றோமாக்ஸ் விளக்குகள் வழங்கப்பட்டன.

சனசமூக நிலையங்களின் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்குடன்—

சனசமூக நிலையங்களின் சமாசத்தினர் மேற்கொண்ட முயற்சியின் காரணமாக— இவை வழங்கப்பட்டன.

சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் இது தொடர்பான வைபவரீதியான நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு வலிகாமம் தெற்கு பிரதேசசபைச் செயலாளர் திரு.தி கணேஸ்வரன் தலைமை வகித்தார்;

சனசமூக நிலையத் தலைவர்களுக்கு வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் திரு. ஆ. மாதாகலிங்கம் இவ்விளக்குகளை வழங்கினார்.

மேற்படி சபையின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திரு. க. தேவராசன், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. சி. கிருஷ்ணசாமி உட்படப் பலர் இதில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

அலுவலகங்கள் மீண்டும் செயலகத்தில்

யாழ்ப்பாணம், ஒக. 25

யாழ். சுபாஸ் விடுதியில் தற்காலிகமாக இயங்கி வந்த வேலணை, ஊர்காவற்றுறை பிரதேச செயலகங்கள் மற்றும் கடற்தொழில் விரிவாக்க அலுவலகம் ஆகியன கடந்த 22ஆம் திகதி முதல் மீண்டும் யாழ். செயலகத்தில் இயங்கத் தொடங்கியுள்ளன. (ஐ-100)

விசர்நாய் கடித்த சிறுவன் சிகிச்சைக்கு பின் மரணம்

யாழ்ப்பாணம், ஒக 25

விசர் நாயினால் கடியுண்ட சிறுவன் ஒருவன் நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானான்.

இம்மாத தொடக்க காலத்தில் விசர்நாய்க் கடிக்குள்ளான பிரஸ்தாப சிறுவன் அதற்குரிய ஏ. ஆர். வி. ஊசிகளை 14 தடவை ஏற்றிய பின் இறுதி ஊசியைப் போட்டுக்கொண்ட மூன்றாம் நாள் திடீரெனக் காய்ச்சல் ஏற்பட்டு மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டார். பின்னர் அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டு சிகிச்சைக்குட்படுத்திய சில மணி நேரத்தில் சிறுவன் மரணமானான்.

வடமராட்சி கிழக்கு தாளையடியைச் சேர்ந்த ஆர். கலையமுதன் (வயது 9) என்ற சிறுவனே மரணமானவராவார்.

நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

நன்மைகள் செய்வாய்!

வேடிக்கை காட்டும் வீணரை ஒழிக்க
வேலேந்தி மயிலேறி விரைவாய் வாராய்
நீடித்து போகின்ற தமிழர் துயரை
நிறுத்தி நீயிங்கே நிம்மதி தாராய்

ஓடி அலைந்து உரிமைகள் இழந்து
ஓலமிட்டுப் புலம்பிடும் உன் மக்களை
நாடிப்ப வருவாய் நல்லூர் வேலவனே!
நம் இனம் வாழ நன்மைகள் செய்வாய்!

—காரைநகர் எம். பி. அருளானந்தன்.

உணவு பொருள்களின் விலையை குறைப்பது குறித்து யோசனை

முதல் அமைச்சரவை கூட்டத்தில் ஆராயப்படும்

கொழும்பு, ஓக. 25

அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளை குறைப்பதற்கு, புதிய அரசு தீவிர முயற்சிகளை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விடயம் குறித்து முக்கிய கவனம் எடுக்கப்படவுள்ளது என்றும்—

இதற்கான வழிவகைகள் குறித்து புதிய அமைச்சரவை கூட்டத்தில் விரிவாக ஆராயப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

சீனி, பருப்பு மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் போதியளவு கையிருப்பில் இருக்கின்றன என்றும் வெளிச் சந்தைக்கு போதியளவு பொருள்கள் விநியோகிக்கப் பட்டதும் விலைகள் வீழ்ச்சியடையும் என்றும் நேற்று வர்த்தக, வாணிப மற்றும் உணவு அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரத்ன நேற்று நம்பிக்கை தெரிவித்தார்.

இலங்கைக்கான உதவியை அமெரிக்கா அதிகரித்தது!

அமைச்சரிடம் தூதர் தெரிவிப்பு

இலங்கைக்கான அமெரிக்க உதவி அதிகரிக்கப்பட்டுள்ளது.

பி. எல் 480 உதவித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள 80 லட்சம் டொலர் நிதி உதவியை ஒரு கோடி 80 லட்சம் டொலராக அமெரிக்கா அதிகரித்து இருப்பதாக, இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் டெறசிற்றா ஷாபர் நேற்றுத் தெரிவித்தார்.

திருமதி ஷாபர் நேற்று வியாபார, வாணிப மற்றும் உணவுத்துறை அமைச்சர் கிங்ஸ்லி ரி. விக்கிரமரத்னாவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபோது, இத்தகவலை வெளியிட்டார்.

இதனிடையில்—

மூன்று கப்பல்களில் இலங்கை வந்து கொண்டிருக்கும் கோதுமை தானியத்தின் விலையில் 2 கோடி ரூபா விலைக்கழிவு பெற இணக்கம் காணப்பட்டுள்ளதாக அமைச்சர் விக்கிரமரத்னா தெரிவித்திருக்கிறார். [ஒ எ]

பாண் ரூ. 3.50 க்கு விற்க வர்த்தக அமைச்சர் முயற்சி

பேக்கரிகாரர்களுடன் நேற்று சந்திப்பு

கொழும்பு, ஓக 25

ஒரு றாத்தல் பாணை 3 ரூபா 50 சதத்துக்கு விற்பனை செய்யும் திட்டத்தை அமுல் படுத்தத் தேவையான நடவடிக்கைகளை வியாபார, வர்த்தக மற்றும் உணவு அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரத்னா எடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனியார் நிறுவனங்களின் உரிமையாளர்களையும் பேக்கரி உரிமையாளர்களையும் நேற்று தமது அமைச்சுக்கு அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். (ஒ-எ-6)

லலித் அணியும் ராவயவும் ஐ.தே.க,தோல்விக்கு காரணம்

கொழும்பு, ஓக. 25

கடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோற்றதற்கு முக்கிய காரணமாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் லலித் பிரிவு அமைந்தது. அடுத்த காரணம் ராவய பத்திரிகையின் பிரசாரமாகும்.

முன்னாள் அமைச்சரும் புதிய எதிர்க்கட்சித் தலைவருமான காமினி திஸநாயக்கா முன்கண்டவாறு செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (உ-எ)

இன்று

புத்தூர் கிழக்கு சனசமூக நிலையத்தில் இன்று வியாழக்கிழமை மாலை 4 30 மணியளவில் சுகாதாரக் கருத்தரங்கும் தொழுநோய் ஆய்வும் மேற்கொள்ளப்படும்.

வடபிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்நிகழ்வில் வடபிராந்திய சுகாதாரத் திணைக்கள தொழுநோய் கட்டுப்பாட்டு உத்தியோகஸ்தர் திரு. மு. குணரட்ணம், சுகாதார போதனாசிரியர் திரு. எஸ். இராஜேந்திரா மற்றும் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பகுதி சுகாதார உத்தியோகத்தர்களும் பங்கேற்கின்றனர். (ய)

ஓய்வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், ஓக. 25

உள்ளூராட்சி மற்றும் ரயில்வே ஓய்வூதியர்களுக்கான இம்மாத பென்ஷன் வவுச்சர்கள் இன்று வியாழக்கிழமை பருத்தித்துறைக்கு வரும் பினம் பயார் கப்பலில் எடுத்து வரப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

அசிரியர் ஒத்து இடம் மாறல்

பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர் ஒருவர் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்துக்கு இடம்மாற விரும்புகிறார். இவருடன் ஒத்து இடம்மாற விரும்புபவர்கள் கீழ்த் தரப்படும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

P. துரைச்சாமி
இளைப்பாறிய தபால் அதிபர்
இந்துக் கல்லூரி அருகில்,
உரும்பிராய்.

(7614)

அறிவித்தல்

யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் கல்லூரியின் மைதான விரிவாக்கத்திற்காகவும், அபிவிருத்திக்காகவும் இன்னிசை நிகழ்ச்சியினை நடாத்தி சேகரித்த ரூபா மூன்றரை இலட்சம் [3½] மைதான விரிவாக்க நிதி என்ற பெயரில் வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளது. இதில் பங்களித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். காணிக் கொள்வனவிற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்பதையும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

மேலும் இதற்கு பங்களிப்புச் செய்ய விரும்பும் அன்பர்கள், நலன்விரும்பிகள் தங்கள் பங்களிப்பினை யாழ் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் எமது கணக்கிலக்கம் 6690 இல் வைப்பிலிடுமாறு அன்புடன் வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.

செயலாளர்,
யாழ் இந்து பழைய மாணவர் சங்கம்

(சி/8939)

அரசியல் பழிவாங்கலில் நாம் ஈடுபட மாட்டோம்

புதிய கல்வி அமைச்சர் பதிரான

கொழும்பு. ஓக. 25

அரசியல் பழிவாங்கலில் ஈடுபடமாட்டேன் என்ற உறுதி மொழியை நான் ஒரு போதும் மீறமாட்டேன்.

கல்வி அமைச்சர் றிச்சர்ட் பதிரான முன்கண்டவாறு தெரிவித்தார்.

பதவிக்கு வந்தவுடன் அரசு வழங்கும் உறுதி மொழி போன்றது தான் இது என்று கேட்டதற்கே அமைச்சர் முன்கண்டவாறு பதிலளித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆதரவளித்ததற்காக சாதாரண அரசஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பழிவாங்கப்படமாட்டார்கள்.

விருப்பமான கட்சிக்கு ஆதரவு வழங்கும் உரிமையை தாம் கௌரவிப்பதாகவும் அவர் கூறினார். (ஐ-எ-6)

மறைமுக 'றாகிங்' செய்தி குறித்து மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம், ஓக. 25

நேற்றைய உதயன் பத்திரிகையில் வெளிவந்த ''மறைமுகமான வழியில் 'றாகிங்' சேஷ்டைகள்'' என்ற செய்தியை வன்மையாகக் கண்டித்து யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறது.

''உதயன்'' பத்திரிகைக்கு அனுப்பப்பட்ட அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

புதிதாகப் பல்கலைக்கழகத்துக்குள் நுழையும் மாணவர்களுக்கு சிரேஷ்ட மாணவர்களால் செய்யப்படும் துன்புறுத்தல்கள் பொதுவாக ''றாகிங்'' என்று கூறப்படுகின்றன. சட்டரீதியாக யாழ் பல்கலைக்கழகத்தில் 'றாகிங்' என்பது தடை செய்யப்பட்ட ஒன்றாகவே உள்ளது. ஆனால் பல்கலைக்கழகத்திற்கும் மாணவர்களுக்கும் கெட்ட பெயர்களை ஏற்படுத்துவதாக சில மாணவர்களின் நடவடிக்கைகள் அமைகின்றன. அத்தகையவற்றை 'றாகிங்' என்று பத்திரிகையில் செய்தி வெளிவந்துள்ளது.

தனிப்பட்ட சில மாணவர்களிடையேயுள்ள பிரச்சினைகளைப் பெரிதுபடுத்தி, மாணவரின் வரவேற்பு ஒன்று கூடலின் பின்னரும் 'றாகிங்' என்று கூறுவது அருவருக்கத்தக்க ஒரு விடயமாகும்.

அத்துடன் இவ்வாறு மிகைப்படுத்தி கூறும் செய்திகள் பல்கலைக்கழக மாணவர்களுக்கு பொதுமக்கள் மத்தியில உள்ள மதிப்பு மரியாதை என்பன குறைக்கப்படுகின்றன.

மேற்படி செய்தி மாணவர்கள் மத்தியில் தங்கள் பத்திரிகைக்கு வெறுப்பை ஏற்படுத்துவதாக அமைகின்றது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் குறிப்பு;

1. நேற்றைய உதயன் பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட சம்பவம் யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது என்பதை விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம் மறுக்கவில்லை.

2. ஒரு சில மாணவர்களின் நடவடிக்கைகள் பல்கலைக்கழகத்துக்கும் மாணவர்களுக்கும் கெட்ட பெயரை ஏற்படுத்துவதாக அமைகின்றன''- என்று ஒன்றியம் குறிப்பிடுகின்றது. அதே விடயம் நேற்றைய உதயன் செய்தியில் ''பெரும்பாலான பல்கலைக்கழக மாணவர்களின் நன்னடத்தையை ஒரு சில மாணவரின் தரமற்ற செயல்கள் மாசுபடுத்துகின்றன என பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன''— என்று ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது.

3 ''தனிப்பட்ட சில மாணவர்களிடையேயுள்ள பிரச்சினையை பெரிதுபடுத்தி மாணவர் வரவேற்பு ஒன்று கூடலின் பின்னரும் 'றாகிங்' என்று கூறுவது அருவருக்கத்தக்க ஒரு விடயமாகும்''— என்று ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தனிப்பட்ட சில மாணவர்களிடையே உள்ள ஒரு பிரச்சினை என்பது உண்மைதான். ஆனால் இது தனிப்பட்ட பிரச்சினையல்ல. பல்கலைக்கழகத்தில் புதிதாக பிரவேசிக்க தனி மாணவன் ஒருவனுக்கு எதிராக சிரேஷ்ட மாணவர்களால் செய்யப்பட்ட விஷமத்தனமான நடவடிக்கையே இவை என்பது எமது விசாரணைகளில் தெரியவந்துள்ளன.

பிரச்சினையைப் பெரிதுபடுத்தி மிகைப்படுத்திக் கூறும் செய்திகள்'' என ஒன்றியம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. பத்துத் தடவைகளுக்கு மேல் சம்பந்தப்பட்ட மாணவனின் சைக்கிளைச் சேதப்படுத்தும் விஷமத்தனமான நடவடிக்கைகளின் பின்னரே இச்செய்தி பிரசுரிக்கப்பட்டது. இச்செய்தி பிரசுரமான நேற்றைய தினமும் பல்கலைக்கழகத் தரிப்பிடத்தில் விடப்பட்ட சம்பந்தப்பட்ட மாணவனின் சைக்கிளில் 'வால்வ்' கட்டைகள் கழற்றப் பட்டிருந்தன என்றும், பூட்டியிருந்த சைக்கிளின் பூட்டில் திறப்பு போடும் பகுதி மண் அடைத்து திறக்க முடியாத நிலையில் இருந்தது என்றும் தெரியவந்தது.

ஏற்கனவே இந்தச் செய்தி பிரசுரிக்கப்பட்டதில் மிகைப் படுத்தலோ, பெரிதுபடுத்தலோ இடம்பெறவில்லை.

4. ஒன்றியம் தனது அறிக்கையில் —

''புதிதாக பல்கலைக்கழகத்துக்குள் நுழையும் மாணவர்களுக்கு சிரேஷ்ட மாணவர்களால் செய்யப்படும் துன்புறுத்தல்கள் பொதுவாக ''றாகிங்'' என்று கூறப்படுகின்றன — எனத் தெரிவித்துள்ளமை போல —

மேற்படி மாணவனுக்கு எதிராகச் செய்யப்பட்ட விஷமத்தனமான நடவடிக்கைகள் மறைமுக றாக்கிங்கே என வலியுறுத்த விரும்புகின்றோம். (ஆ-ர்)

காணாமற் போனார்?

யாழ்ப்பாணம், ஓக 25

வடமராட்சி கிழக்கு உடுத்துறைக் கடலில் கடந்த சனிக்கிழமை காலை கடற்படையினர் நடத்திய தாக்குதலில் இறந்ததாகக் கருதப்பட்ட முத்துத்தம்பி பாலகிருஷ்ணன் காணாமற் போயுள்ளார் என்று இப்போது நம்பப்படுகிறது.

சம்பவத்திற்கு அடுத்தநாள் உறவினர்கள் கடலில் தேடுதல் நடத்திய போது அவர் சென்ற படகு எவ்வித சேதமும் இன்றி வலைகளுடன் காணப்பட்டதாகவும் —

சடலம் எதுவும் மீட்கப்படவில்லை என்றும், அதனால்—

தம்பியண்ணா என அழைக்கப்படும் முத்துத்தம்பி பாலகிருஷ்ணனை கடற்படையினர் பிடித்துச் சென்றிருக்க வேண்டும் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (அ)

நாககோவில்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

தின இக்கக் கண்டுபிடிக்கப்பட்டன. கைவிடப்பட்ட கட்டுமரமும், வலைகளும் ஏனைய மீனவர்களால் மீட்டு வரப்பட்டன.

இதேவேளை; நேற்றுக் காலை சுமார் 6-30 மணியளவில் தொண்டமனாறு வல்வெட்டித்துறை பொலிகண்டி பகுதிகளிலும் ஸ்ரீலங்கா கடற்படையினர் தாக்குதல்களை நடத்தினர்.

இத் தாக்குதல்களினால் கரையோரப் பகுதியிலுள்ள குடிமனைகளை சன்னங்கள் தாக்கியுள்ளன. தொழிலில் ஈடுபட்டிருந்த மீன[illegible] தெய்வாதீன[illegible] [illegible]ண்டனர்.

(ஒ-173-155-117)

பொருளாதார தடையை நீக்கினால் ஆக்கபூர்வ அடையாளமாக அமையும்

அன்ரன் பாலசிங்கம் கூறியதை பி.பி.ஸி. ஞாபகப்படுத்துகிறது

கொழும்பு, ஓக. 25

★ பொருளாதாரத் தடையை நீக்குதல்.

★ ஷெல் தாக்குதல்களை நிறுத்துதல்;

— பேச்சுவார்த்தை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் விதித்துள்ள இரு கோரிக்கைகள் இவை என பி. பி. ஸி நேற்று தனது கண்ணோட்டத்தில் குறிப்பிட்டது;

பொருளாதாரத் தடை நீக்கம் தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பி. பி. ஸி செய்தியாளருக்கு முக்கிய பேட்டியின் ஒரு பகுதியையும் அவரது குரலிலேயே பி.பி.ஸி ஆங்கில சேவை நேற்று ஒலிபரப்பியது.

''பொருளாதார முற்றுகை நீக்கப்படும்போது கைதிகளை நாங்கள் விடுதலை செய்வோம்.

''நாம் பொருளாதார முற்றுகையை நீக்குவதை ஒர் ஆக்கபூர்வமான அடையாளமாகக் கருதுகின்றோம். அரசாங்கத்தின் நல்லெண்ணச் சைகையாக நாம் இதைக் கொள்வோம்.

''இந்த நடவடிக்கைகளை தமிழீழ விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை,''

—இவ்வாறு அந்தப் பேட்டியில் திரு பாலசிங்கம் குறிப்பிட்டிருந்தார். (உ-எ-ஊ-6)

தடையை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விஜேதுங்கவே வைத்திருக்கிறார். பொருளாதாரத் தடையை நீக்க புதிய அரசு விரும்பினாலும் அதற்கான உத்தரவை பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியே விடுக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும்—

புதிய அரசாங்கத்தின் முடிவுகளுக்கு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க இதுவரை எதிர்ப்பு எதனையும் தெரிவிக்கவில்லை எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே பொருளாதாரத் தடையை நீக்க புதிய அரசு முடிவு செய்யலாம் —

அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல், அதனை ஏற்று அது தொடர்பான பிரகடனத்தை டி. பி. விஜேதுங்க விடுக்கக் கூடும் என்றும் ஒரு கருத்து நிலவுகின்றது.

தற்போது வடபகுதிக்கு அனுப்பப்படுவதற்கு மொத்தம் 73 பொருள்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பற்றறிகள், இரசாயன உரவகைகள், வெடிகுண்டு தயாரிக்கப் பயன்படக்கூடிய பொருள்கள் என்பவற்றுடன் பிஸ்கட், சவர்க்காரம் முதலிய அத்தியாவசியப் பொருள்களும் தடை செய்யப்பட்டிருக்கின்றன என்பது ஆச்சரியத்தைத் தருவதாக உள்ளது என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது. (உ-எ-6)

சபாநாயகர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்வதற்கான இரகசிய வாக்கெடுப்பு இன்றே நடைபெறவிருக்கிறது.

இந்த வாக்கெடுப்பில் யார் வெற்றிபெறுவார் என்பதை அரசியல் அவதானிகள் உன்னிப்பாக கவனித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் வாய்ப்பை எதிர்பார்த்து ஏமாந்துபோன முன்னணி எம். பிக்கள் சிலரின் வாக்குகளை அனுராவுக்குக் கிடைக்கச் செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது முன்னணி அரசில் எம். பியாக உள்ள சிலர் அனுராவின் நெருங்கிய நண்பர்கள் என்றும் —

இந்த அம்சத்தையும் ஐ. தே. கயினர் தமக்குச் சாதகமாக பயன்படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை நீக்குவதற்கு புதிய அரசு உறுதியளித்துள்ள நிலையில், தமிழ்க் கட்சிகளின் எம். பிக்கள் சபாநாயகர் தெரிவின் போது எப்படி நடந்து கொள்வர் என்பதையும் ஆர்வத்துடன் அவதானிகள் எதிர்பார்த்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ-6)

வீடமைப்பு வங்கி நிறுவப்படும்

குறைந்த வீத வட்டியில் வீடமைப்புக் கடன் வழங்கும் வீடமைப்பு வங்கி ஒன்றை அமைப்பதற்கு வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் பொதுவசதிகள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அரச ஊழியர்கள், மத்திய தர வகுப்பினர் வீடுகள் கட்டுவதற்கு உள்ள அசௌகரியங்களை நீக்க, அவர்கள் இலகுவில் வீடமைப்புக் கடன்களைப் பெற்றுக் கொள்ள உதவு முகமாக இவ்வீடமைப்பு வங்கி நிறுவப்படவுள்ளது (ஒ எ-6)

விளையாட்டு நிகழ்வுகள்

யாழ், உதைபந்தாட்டச் சங்கமும், வலி கிழக்கு உதைபந்தாட்டச் சங்கமும் இணைந்து நடத்தும் 'நொக் அவுட்' முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று மாலை சென் அன்ரனீஸ் மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

★ பிற்பகல் 4 மணி— தொடர்மாடி வி. க அணி எதிர் பாரதி வி. க.

★ பிற்பகல் 5 மணி — கிறீன் பீல்ட் எதிர் அரியாலை

ஐ.தே.கவில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யோரைத் தாக்குவதாக அமைந்துள்ளது.

பிரேமதாஸாவுக்கு எதிராக அரசியல் குற்றப் பிரேரணையைக் கொண்டு வந்ததற்காக காமினியையும் லலித் அத்துலத் முதலியையும் கடுமையாக விமர்சித்த ஒஸி அபய குணசேகரா இன்று ஐ. தே. கவின் எம். பியாக உள்ளார்.

புதிய நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவருக்கு அவர்கள் கட்சிக்குள்ளேயே எதிர்க்கட்சி ஒன்று உருவாகும் நிலை காணப்படுகின்றது.

இப்படி அக்கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ-6)

பொருளாதார...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தோழமை முயற்சிகளை ஆரம்பித்துள்ளார்.

யுத்தத்திற்கு அரசியல் பேச்சுவார்த்தைகள் மூலம் முற்றுப்புள்ளி வைக்க அவர் தலைமையிலான அரசாங்கம் உறுதி பூண்டிருக்கிறது.

பிரதமரின் முயற்சிகளுக்கு ஆதரவான பதிலை விடுதலைப் புலிகள் தருவார்கள் என நான் நம்புகின்றேன். புலிகளிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

இந்த வாய்ப்பை விடுதலைப் புலிகளும் உரிய முறையில் பயன்படுத்தி ஆக்கபூர்வமாக செயல்பட வேண்டும்.

மாற்றம் ஏற்படுத்த முயற்சி

வடபகுதியில் இடம்பெற்று வரும் உடைமைகள் நாசம் மற்றும் உயிர்ப்பலிகளை நிறுத்துவதற்கு ஏதுவாக அரசியல் தீர்வைக் காண்பதற்கு எமது அரசு தம்மாலான அனைத்து முயற்சிகளையும் எடுக்கும்.

இதன் மூலம் மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

யுத்த நிலைமை நாட்டுக்கு பாரிய சுமையாக உள்ளது. எமது முக்கிய நோக்கம் போரை நிறுத்துவதுதான். இதற்காக நாம் கண்டிப்பாக ஏதாவது செய்தாக வேண்டும்.

யாழ்ப்பாண குடாநாட்டில் பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் அங்குள்ள சாதாரண தமிழ் மக்களே பெரும் கஷ்டப்படுகின்றார்கள். உணவுப் பொருள்களையும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களையும் அங்கு கொண்டு செல்வதில் உள்ள தடைகளை நீக்குவதற்கு சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை விலக்கிக் கொள்வது தொடர்பாக இராணுவ அதிகாரிகளுடன் நான் பேச்சுக்களை நடத்தியுள்ளேன்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதே எமது ஒரே நோக்கம்.

அவ்வாறு அரசியல் தீர்வு ஒன்றைக் காண முடியாமற் போனால் எழுகின்ற நிலைமைகளுக்கு ஏற்புடைய நடவடிக்கை எடுக்கப்படும் — என்றும் அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி வழங்கும் ஆலோசனைகளையும் உத்தரவுகளையும் அமுல் செய்வதாகவும் —

அவர் மூலமாக தமக்கு ஆகக்கூடிய ஒத்துழைப்புக் கிடைப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (உ-ஒ-எ-ஊ-4-6)

மரண அறிவித்தல்கள்

திருமதி சந்தியாப்பிள்ளை திரேசம்மா

(சில்லாலை)

சில்லாலையைச் சேர்ந்தவரும், கொக்குவில் சம்பியன் வீதியை வசிப்பிடமாக கொண்டவருமான சந்தியாப்பிள்ளை திரேசம்மா (24-08-1994) நேற்று காலமாகிவிட்டார்

இவர் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளையின் அன்பு மனைவியும் அகினெஸ், காலஞ்சென்ற மரியாம்பிள்ளை (வெனடி வாஜ் வேகஸ் யாழ்ப்பாணம்), பிறிஜிற், சடிபொன்சலா (அவுஸ்ரேலியா), மரியதாஸ் (பற்றிமா வாஜ் வேகஸ் பண்டத்தரிப்பு), யோசவ் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், மரியசம்பிள்ளை, லூர்துமலர், காலஞ்சென்ற வில்லவராசிங்கம், றெஜீஸ், மலர் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25-08 94) பி. ப 3 மணிக்கு ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின்னர், நல்லடக்கத்திற்காக பரி கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்;
மரியதாஸ்
(மகன்)

சம்பியன் லேன்,
கொக்குவில்.

(32563)

திருமதி சந்திரவதனி சண்முகானந்தா

(வதனா - ஆசிரியை, வீமன்காமம் மகாவித்தியாலயம்)

உடுவிலைப் பிறப்பிடமாகவும், தற்போது சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரவதனி சண்முகானந்தா (வதனா) நேற்றுக் காலமானார்.

இவர் சண்முகானந்தா (டுபாய்) வின் அன்பு மனைவியும், அகிலனின் (உடுவில் மகளிர் கல்லூரி) அன்புத் தாயாரும், திருமதி மாலினிதேவி (U K.), திருமதி கலாவேணி (U K.) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கந்தையா (வைத்திய அதிகாரி) - ஆச்சிமுத்து (உரும்பராய்) ஆகியோரின் மூத்த மகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 25-08-94 பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சண்முகானந்தா [கணவர்]
நடராசா [மாமன்]
[மக்கள் வங்கி, சுன்னாகம்.]

இலங்கை வங்கி அருகில்,
சுன்னாகம்.

(32566)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், காவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 25 - 08 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.